

ஜனவரி 1, 2020 முதல், ஒன்ராறியோவில் உள்ள சிறுவர் நலன்புரி சங்கம், குழுவினர் இல்லம் அல்லது பிள்ளைகளுக்கும் குடும்பத்துக்கும் உதவும் வேறொரு சேவை வழங்குநரிடமிருந்து நீங்களோ அல்லது உங்கள் குடும்பத்தினரோ உதவி அல்லது ஆதரவைப் பெற்றிருந்தால், உங்கள் கோப்பிலுள்ள உங்களின் தனிப்பட்ட தகவல்களைப் பார்ப்பதற்கும், திருத்தங்களைக் கேட்பதற்கும் உங்களுக்கு உரிமை உள்ளது.

ஒன்ராறியோவின் பிள்ளைகள் மற்றும் குடும்ப சேவைகள் சட்டத்தின் கீழ், உங்கள் தனிப்பட்ட தகவல்கள் எவ்வாறு பயன்படுத்தப்படும் என்பதையும் அதை அவர்கள் எவ்வாறு பகிர்ந்து கொள்ளக்கூடும் என்பதையும் சேவை வழங்குநர்கள் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். உங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளும் எந்தவொரு தனிப்பட்ட தகவலும் தனிப்பட்டதாக இருப்பதை உறுதிசெய்வதுடன், அது தொலைந்துவிட்டதா, பகிரப்பட்டதா, திருடப்பட்டதா அல்லது பார்க்கக்கூடாத சமயத்தில் பார்க்கப்பட்டதா என்பதையும் அவர்கள் உங்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

**ஒன்ராறியோவின் தகவல் மற்றும் தனியுரிமை ஆணையாளரின் அலுவலகம் செய்யும் பணி என்ன?**

சிறுவர் நலன்புரி சங்கங்கள், குழுவினர் இல்லங்கள் மற்றும் பிற சேவை வழங்குநர்கள் யாவரும், ஒன்ராறியோவின் பிள்ளைகள் மற்றும் குடும்ப சேவைகள் சட்டத்தின் கீழ் தனிப்பட்ட தகவல்களைப் பாதுகாப்பதற்கும் அணுகுவதற்கும் உரிய விதிகளைச் சரியாகப் பின்பற்றுவதை எங்கள் அலுவலகம் உறுதி செய்கின்றது.

Information and Privacy Commissioner of Ontario
Commissaire à l'information et à la protection de la vie privée de l'Ontario

2 Bloor Street East, Suite 1400
Toronto, Ontario, Canada M4W 1A8
தொலைபேசி: 416-326-3333 / 1-800-387-0073
TDD/TTY: 416-325-7539

www.ipc.on.ca
info@ipc.on.ca

செப்டம்பர் 2019

# இது உங்களைப் பற்றியது

## ஒன்ராறியோவின் பிள்ளைகள் மற்றும் குடும்ப சேவைகள் சட்டத்தின் கீழ் உங்கள் கோப்பு மற்றும் உங்கள் உரிமைகள்

Information and Privacy Commissioner of Ontario
Commissaire à l'information et à la protection de la vie privée de l'Ontario



## எனது கோப்பிலுள்ள எனது தனிப்பட்ட தகவல்களைப் பார்க்கும்படி நான் கேட்பதற்கு முன்னர் எனக்கு 18 வயது ஆகியிருக்க வேண்டுமா?

எந்த வயதினரும் தங்கள் கோப்பிலுள்ள தனிப்பட்ட தகவல்களைப் பார்க்க அல்லது திருத்தங்களைச் செய்யக் கேட்டுக் கொள்ளலாம்.

## எவ்வகையான தகவல்கள் குறித்து நான் கேட்டுக் கொள்ள முடியும்?

உங்கள் கோப்பில் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பார்ப்பதற்கும் அதன் பிரதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளவதற்கும் நீங்கள் கேட்டுக் கொள்ளலாம். உங்கள் வரலாறு, உங்கள் உடல்நலம் அல்லது சமூக சேவகர் அல்லது பிற நிபுணருடன் நீங்கள் நடத்திய உரையாடல்களின் குறிப்புகள் பற்றிய தகவல்கள் ஆகியன இதில் அடங்கும். நீங்கள் கேட்டால், இந்தத் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு உங்கள் சேவை வழங்குநர் கண்டிப்பாக உங்களுக்கு உதவ வேண்டும்.

இந்த விதிகள் தத்தெடுப்புப் பதிவுகளுக்குப் பொருந்தாது. ஒன்ராறியோவில் உங்கள் தத்தெடுப்புப் பதிவுகளைப் பெறுவது பற்றிய மேலதிகத் தகவல்களுக்கு 1-800-461-2156 ஐ அழைக்கவும்.

## இதற்கு எவ்வளவு செலவாகும், எவ்வளவு காலம் எடுக்கும்?

உங்கள் தகவல்களின் பிரதியைக் கோருவது இலவசம். பெரும்பாலான சந்தர்ப்பங்களில், சேவை வழங்குநர்கள் 30 நாட்களில் இதற்காக உங்களைக் கட்டாயம் தொடர்பு கொள்ள வேண்டும்.

## நான் கேட்கும் தகவல்கள் அனைத்தும் கிடைக்குமா? நான் ஒரு பிரதியைக் கேட்டுக் கொள்ளலாமா?

சில நேரங்களில் சேவை வழங்குநரால் நீங்கள் கேட்கும் தகவல்கள் அனைத்தையும் உங்களுக்கு வழங்க முடியாது. சட்டத்தின் கீழ் அதற்கு அவர்கள் அனுமதிக்கப்படாதது இதற்குக் காரணமாக இருக்கலாம். நீங்கள் கேட்ட தகவல்கள் அனைத்தையும் சேவை வழங்குநர் உங்களுக்கு வழங்காதபோது, அதற்கான காரணத்தையும் அவர் உங்களுக்குச் சொல்ல வேண்டும். சேவை வழங்குநரால் உங்கள் கோப்பிலுள்ள அனைத்தையும் காட்ட முடியாவிட்டாலும், அவர்கள் உங்களுக்கு அதில் உள்ளவற்றின் ஒரு சுருக்கத்தை மட்டும் கொடுத்தால் போதாது. உங்கள் கோப்புக்கான அணுகலையும், நீங்கள் பிரதி ஒன்றைக் கேட்டால் அதனையும் அவர்கள் உங்களுக்கு வழங்க வேண்டும்.

## எனது கோப்பிலுள்ள தகவல் தவறாக உள்ளது அல்லது விடுபட்டுள்ளது, அதை எவ்வாறு சரிசெய்வது?

சேவை வழங்குநரிடம் கடிதம் மூலம் திருத்தம் செய்யும்படி கேட்கவும். சில சேவை வழங்குநர்கள் நீங்கள் பயன்படுத்தக்கூடிய ஒரு படிவத்தை வைத்திருக்கலாம். என்ன தவறு அல்லது எது விடுபட்டுள்ளது என்பதை அவர்களிடம் கூறிச், சிக்கலைச் சரிசெய்யத் தேவையான தகவலை அவர்களுக்கு வழங்குவதை உறுதி செய்து கொள்ளவும். உங்கள் கோப்பிலுள்ள தனிப்பட்ட தகவல்களில் திருத்தம் செய்யக் கேட்பது இலவசம்.

## நான் கேட்ட தகவல்கள் அல்லது மாற்றங்கள் கிடைக்கவில்லை என்றால் நான் என்ன செய்ய முடியும்?

ஒரு சேவை வழங்குநர் உங்கள் கோப்பில் உங்கள் தனிப்பட்ட தகவல்களைப் பார்க்க அனுமதிக்கவில்லை அல்லது அதில் திருத்தங்களைச் செய்யவில்லை என்றால், அதற்கான காரணத்தை அவர்கள் எழுத்து மூலமாக உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். நீங்கள் கேட்பதற்குரிய பதில் கிடைக்க 30 நாட்களுக்கு மேல் ஆகுமா என்பதையும் அவர்கள் உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

உங்களுக்குத் தகவல்களை வழங்காததற்கு அல்லது நீங்கள் கேட்ட மாற்றங்களைச் செய்யாததற்கு உரிய அவர்களின் காரணங்களை நீங்கள் ஏற்கவில்லை என்றால், சேவை வழங்குநரைத் தொடர்பு கொள்ளவும். உங்களுடன் இணைந்து அவர்கள் இதற்கான தீர்வு ஒன்றைக் காண முடியும். உங்களுக்குப் பின்னரும் பிரச்சனைகள் இருந்தால், ஒன்ராறியோவின் தகவல் மற்றும் தனியுரிமை ஆணையாளரைத் (Information and Privacy Commissioner of Ontario) தொடர்பு கொண்டு சேவை வழங்குநரைப் பற்றி முறையீடு செய்யலாம். www.ipc.on.ca இல் முறையீட்டுப் படிவம் ஒன்றைப் பூர்த்தி செய்யலாம்.

## எனது அனுமதியின்றி எனது தனிப்பட்ட தகவல்கள் பயன்படுத்தப்பட்டது, தொலைந்தது, திருடப்பட்டது அல்லது பகிரப்பட்டது என நான் கண்டறிந்தால் என்ன நடக்கும்?

உங்கள் சேவை வழங்குநர் உங்களைப் பற்றிய தகவல்கள் தொலைந்துவிட்டதா, பகிரப்பட்டதா, திருடப்பட்டதா அல்லது பார்க்கக்கூடாத சமயத்தில் பார்க்கப்பட்டதா என்பதை உங்களுக்குத் தெரிவிக்க வேண்டும். என்ன நடந்தது, பிரச்சனையைச் சரி செய்ய என்ன செய்கிறார்கள் என்பதையும் அத்துடன் உங்களுக்கு கேள்விகள் இருந்தால் யாரைத் தொடர்பு கொள்வது என்பதையும் அவர்கள் எழுத வேண்டும். ஒன்ராறியோவின் தகவல்கள் மற்றும் தனியுரிமை ஆணையாளரிடம் நீங்கள் எவ்வாறு முறையீடு செய்யலாம் என்பதையும் கூட அவர்கள் உங்களுக்குச் சொல்ல வேண்டும்.

முறையீடு செய்வது பற்றி மேலும் அறியவும், பொதுவாகக் கேட்கப்படும் கேள்விகளுக்கான பதில்களைப் பெறவும் www.ipc.on.ca.

InformationandPrivacyCommissionerofOntario

@IPCinfoprivacy

நீங்கள் விரும்பினால் யோர்க் பிராந்திய CAS இல் யாருடன் பேச வேண்டும்:

- உங்கள் தனிப்பட்ட உரிமைகள் பற்றிக் கேட்கவும்
- அணுகல் அல்லது திருத்தக் கோரிக்கையை உருவாக்கவும்
- முறையீடு செய்யவும்

மின்னஞ்சல் மூலம் யோர்க் பிராந்திய சிறுவர் நலன்புரி சங்கத்தில் உள்ள தனியுரிமை அதிகாரியைத் தொடர்புகொள்ளலாம் privacy.officer@yorkcas.org.

மேலதிகத் தகவல்களுக்கு, எமது வலைத்தளமான www.yorkcas.org இல் உள்ள எங்கள் தகவல் நடைமுறைகளின் அறிவிப்பைப் பார்க்கவும் அல்லது எங்கள் அலுவலகம் ஒன்றில் அச்சிடப்பட்ட பிரதி ஒன்றைப் பெற்றுக் கொள்ளவும்.